1979 மார்ச் 14]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) சென்னையிலிருந்து - கன்னியாகுமரி வரை செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையில், தற்போது மேலும் பாலங்கள் கட்டும் உத்தேசம் இல்லை.

(ஆ) தற்போது நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் மாநிலத் தொடர்பு மற்றும் பொருளாதார முதன்மைப் பணித் திட்டத்தின்கீழ் 6 பால வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(இ) மேற்கூறிய 6 பாலங்கள் தவிர கிழக்குக் கடற்கரைச் சாலையில் தற்போது எந்த பால வேலைகளும் கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டு பரிசிலனையில் இல்லை.

வடக்குத் தாமரைக்குளத்தின் அருகே உள்ள பாலம்

*வினா எண். 374 —திரு. செ. கிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி தொகுதியில் வடக்குத் தாமரைக்குளத்தில் மேற்காக வடக்குத் தெற்காக ஓடுகின்ற பழைய ஆற்றின் குறுக்கே உள்ள கல்பாலம் சமீபத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

சடையனேரி கால்வாய்.

*வினா எண். 392— திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், சடையனேரி கால்வாயில் ஸ்ரீவைகுண்டம் அணையில் மறுகால் தண்ணீர் சென்றால்தான் தண்ணீர் விடப்படும் என்ற ஒப்பந்தத்தை மாற்றி அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது அந்த முறை மாற்றியமைக்கப் படும்?